


# முளையில் வாடிய பயிர்

# முளையில் வாடிய பயிர்....

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு அது புலிகளின் பிரதிநிதிகளால் மாத்திரம் நிர்வகிக்கப்பட வேண்டும். இத்தகையதொரு கோரிக்கை அண்மைக்காலங்களில் முன்மொழியப்பட்டு வருகின்றது. இந் நிலையில் 1987ம் ஆண்டின் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால ஆளும் சபையை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றி மீள் பரிசீலனை செய்வது பொருத்தமானது. அப்போது கொழும்பில் இந்தியாவுக்கான தூதுவராக பணிபுரிந்த ஜே.என்.தீக்சித் எழுதி வெளியிட்டுள்ள " கொழும்புப்பணி " ( ASSIGNMENT COLOMBO) என்னும் நூலில் இது பற்றி விபரித்துள்ள விடயங்களில் சில பகுதிகளை இங்கு வழங்கியுள்ளோம்.

இதன் அடிப்படையில் கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு அரசியல் தலைமைத்துவம் ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும், தற்போதைய நிலையில் புலிகளின் கோரிக்கைகள் தொடர்பாகவும் சிந்திப்பது பொருத்தமானதாகும். அதற்கு உதவும் வகையில் இச் சிறு பிரசுரம் தயார் செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு : மக்கள் குரல் வெளியீட்டகம

இல.121, பூங்கா வீதி,

கொழும்பு -05

# தேடி வந்த வாய்ப்பு

1987ன் ஆகஸ்ட் செப்ரெம்பர் மாதங்களில் வடக்கு – கிழக்கு மாகாணத்திற்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாகவும், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஏனைய அம்சங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கொழும்பில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டது. இப்பேச்சுக்களில் இலங்கை அரசு சார்பில் ஜனாதிபதியின் செயலாளர் மெனிக்திவல தலைமையிலான தூதுக்குழுவில் பிரதமமந்திரியின் அலுவலகம், பாராளுமன்றம், நிதி அமைச்சு என்பவற்றின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்திய அரசு சார்பாக இந்திய உள்துறை அமைச்சிலிருந்து அரசியலமைப்பு விவகார நிபுணர் நாராயணசாமி, இலங்கை விவகாரங்களுக்கான இணைச் செயலாளர் குல்திப் சகாதேவ், கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் ஜே.என்.தீக்சித், மற்றும் இந்திய உள்துறை அமைச்சு, கொழும்பிலிருந்த இந்தியத் தூதுவரகம் என்பவற்றின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தப் பேச்சுக்களின் பெறுபேறாக 1987ன் இறுதியில் அல்லது 1988 மார்ச் மாதத்திற்கு முன்பாக தேவையான அரசியலமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை அரசு சம்மதித்து இருந்தது. எனினும் நிதி, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, காணி விவகாரம் போன்றவற்றை அதிகாரப் பரவலாக்கலுக்கு உட்படுத்துவதில் இலங்கை அரசுக்கு பெரும் தயக்கம் இருந்தது.

மத்திய மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு ஏற்றதாக அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்பது எமது ஆலோசனையாக இருந்தது. இந்தியாவில் மத்திய,மாநில அரசுகளுக்கு உரித்தான விடயங்கள் மத்திய பட்டியல், மாநிலப்பட்டியல், மற்றும் பொதுவான பட்டியல் என வெவ்வேறாக வரையறுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. இது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தமிழ் மக்களுக்கு சம உரிமைகளை வழங்கும் வகையில் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்வது சிக்கலானதும், நீண்ட காலம் எடுக்கக்கூடியதும் என்பதை இலங்கை அரச தரப்பு வெளிப்படுத்தியது. எனினும், இடைக்கால நிர்வாகத்திலும், பாதுகாப்பு பிரிவிலும் தமிழ் இளைஞர்களை உள் வாங்குவது தொடர்பாக சிறிதளவு ஆர்வம் காணப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில், புலிகள் இந்திய அமைதிப்படையின் யாழ்ப்பாணத் தலைமையகத்துடன் ஏறத்தாழ ஒவ்வொரு நாளும் தொடர்பு கொண்டிருந்தனர். அதிகாரிகள் உணவு விடுதிக்கு அடிக்கடி வந்து செல்லும் விருந்தினர்களில் ஒருவராக பிரபாகரன் இருந்தார். இருந்தாலும் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு வரையறைக்கு உட்பட்ட ஆதரவு நல்கும் நிலைப்பாட்டிலிருந்து பிரபாகரன் பின்வாங்கத் தொடங்கினார். இலங்கை அரசுக்கு எதிராகவும், இந்தியக் கொள்கைகளுக்கு எதிராகவும் புலிகள் மக்களைத் தூண்டிவிட்டு நடத்திய பேரணிகளை இந்திய அமைதிப் படையினர் கண்டனர். செப்ரெம்பர் 15ல், திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு முன்பாக ஆரம்பித்தார். இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஐந்து வாரங்களில் நிலைமைகள் நெருக்கடிக்கு உள்ளாகின.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரமுகர்கள் பலரும் வடக்கு கிழக்கு மாகாணத்தின் இடைக்கால நிர்வாகம் உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென அழுத்தம் கொடுத்தனர். பல்வேறு தமிழ் அமைப்புகளுடனும் கலந்தாலோசித்து இடைக்கால நிர்வாகம் விரைவாக நியமனம் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் படி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைக் கேட்குமாறு எனக்கு புதுடில்லியிலிருந்து பணிப்புரை விடுக்கப்பட்டது. இக்கட்டத்தில் இலங்கை அரசாங்க அதிகாரிகளுடனோ, இந்திய அமைதிப் படைத் தளபதிகளுடனோ, கலந்துரையாடல்கள் எதையும் மேற்கொள்வதற்கு பிரபாகரன் திட்டவட்டமாக மறுத்து வந்தார். அவர் தமக்கு நெருக்கமான ஆலோசகர்கள் மற்றும் தளபதிகளோடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு சமீபமான ஓரிடத்தில் ஒதுங்கிக் கொண்டார்.

இடைக்கால நிர்வாகத்திற்கான அதிகாரங்கள் முதலில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதையே பிரபாகரன் வலியுறுத்தி வந்தார். அரசியலமைப்பு திருத்தங்கள் போன்ற நடைமுறை ஏற்பாடுகளுக்காகக் காத்திருக்க அவர் விரும்பவில்லை. உண்மையில் இந்தக் காலதாமதங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன என்னும் சந்தேகத்தையே அவர் கொண்டிருந்தார். பிரேமதாசா மற்றும் லலித் அத்துலத்முதலி போன்றோரின் சதி நாசச் செயல்கள் குறித்த புலனாய்வுத் தகவல்கள் அவருக்கு சில சமயம் கிடைத்திருக்கக்கூடும்.

புலிகள் ஏற்பாடு செய்த பொது மக்களின் ஆர்ப்பாட்டங்கள் ஜெனரல் ஹர்கிரத்

நோக்கங்கள் சங்கடத்தை தோற்றுவித்தது. நெருக்கடி நிலைமையைத் தணிப்பதற்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் பிரசன்னம் அவசியமென அவர் இராணுவத் தலைமைக்கு அழுத்தம் கொடுத்தார். எனினும் எனக்கு தயக்கம் இருந்தது. ஒரு கட்டத்தில், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தனது அரசியல் கடமைகளை நிறைவேற்ற பின் நிற்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

உத்தேசிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகத்திற்கு ஜே.ஆர். அரசினால் அதிகாரங்கள் தொடர்பாக தெளிவான வரையறைகள் செய்யப்பட்ட பின்னர் எவ்வாறு அமைப்பது என்பது தொடர்பில் பிரபாகரனுடன் பேசலாம் எனத் தெரிவித்தேன். எனினும், உடனடியாக யாழ்ப்பாணம் சென்று இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசும்படி எனக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. செப்ரெம்பர் 10க்கும் 17க்கும் இடையில் நிகழ்ந்துவிட்ட சம்பவங்களைத் தொடர்ந்து பிரபாகரனுக்கு கவலை ஏற்படுத்தியுள்ள விடயங்கள் தொடர்பாக அவருடன் பேசுவதற்காக யாழ்ப்பாணம் வருகிறேன் என்ற தகவலை அமைதிப்படையின் யாழ்ப்பாண தலைமையகத்திற்கு அனுப்பி வைத்தேன். செப்ரெம்பர் 21ம் திகதியன்று சந்திப்புக்கான நாள் ஒதுக்கப்பட்டது. எனினும் செப்ரெம்பர் 19ம் திகதியன்று மீண்டும் மீண்டும் கிடைத்த செய்தியில் பிரபாகரன் பேச்சுவார்த்தைகளுக்கு வரமாட்டார் எனவும், பாலசிங்கம், யோகி, மாத்தயா போன்றோருடன் பேசும்படியும் தெரிவிக்கப்பட்டது. பிரபாகரன் நேரடியாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்துவதுடன், கொழும்பிலிருந்து புறப்படு முன்னர் இந்திய அமைதிப்படையினருடன் பிரபாகரன் இருப்பதை உத்தரவாதப்படுத்திய பின்னரேயே பயணம் ஆரம்பமாகும் என்றும் ஜெனரல் ஹர்கிரத் சிங்கிற்கு தெளிவு படுத்தினேன். இந்தக் கருத்து வேறுபாடுகள் முதலாவது சந்திப்பை இரு தினங்கள் தாமதப்படுத்தியது. செம்ரெம்பரின் கடைப்பகுதியில் நான் மூன்று தடவைகள் பிரபாகரனைச் சந்தித்தேன்.

இப்பேச்சுவார்த்தையில் புலிகளின் சார்பாக பிரபாகரன் தலைமையில் பாலசிங்கம், மாத்தயா, யோகி, லோரன்ஸ் திலகர், மகேஸ்வரன், சிவானந்தசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தியத் தரப்பில் என்னுடன் கப்டன் குப்தா முதலாவது செயலாளர் ஹர்தீப் பூரி மற்றும் கே.பீ.ஏர்னஸ்ட் ஆகியோரும், இந்திய படையினர் தரப்பில் லெப்.ஜெனரல்

திபேந்தர்சிங், மேஜர்ஜெனரல் ஹொர்கிரத் சிங், பிரிகேடியர் இராகவன், பிரிகேடியர் பெர்னாண்டஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். பிரபாகரனுக்காக பாலசிங்கமும், எனக்காக மேஜர் எஸ்.எஸ். சாயியும் மொழிபெயர்த்தனர். பிரபாகரன் தமிழிலும் நான் ஆங்கிலத்திலும் பேசினோம்.

எனது பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலில் நான்கு அம்சங்கள் இடம்பெற்று இருந்தது. இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் பிரபாகரனுக்கு ஏற்பட்டிருக்கும் கவலைகள், அச்சங்கள், சந்தேகங்கள் பற்றிக் கேட்டறிவது முதலாவது. இந்திய அமைதிப்படையினருக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும் செயற்பாடுகளையும், திலீபனின் உண்ணாவிரதத்தையும் முடிவுக்கு கொண்டுவருவதற்கு இணங்கச் செய்வது இரண்டாவது. இடைக்கால நிர்வாகத்தை புலிகள் பொறுப்பேற்பதற்கான இறுதி ஏற்பாடுகளை வரையறுப்பது மூன்றாவது. உடனடியாக இடைக்கால நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாட்டை எடுத்துரைப்பது நான்காவது. மேலும் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வது தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது. இவற்றை நிறைவேற்ற கால வரையறை விதிப்பது பற்றியும் பேசப்படவிருந்தது.
செப்ரெம்பர் உம் திகதியன்று ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை சந்தித்து பிரபாகரனுடன் பேசவுள்ள விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினேன். இடைக்கால ஆளும் சபையின் தலைவராக பிரபாகரனை நியமிக்க விரும்புவதாக உத்தியோகபூர்வமாக தெரிவிக்கும் படி அதிகாரம் வழங்கினார் ஜே.ஆர். தேர்தலொன்றின் மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு அமைச்சரவை அமைக்கப்படும் வரை அவர் முதலமைச்சருக்கு உரிய அதிகாரங்களுடன் செயற்பட முடியுமெனவும் குறிப்பிட்டார். நிர்வாக அதிகாரங்கள், சட்டமும் ஒழுங்கு பராமரிப்பு முதலிய விடயங்களில் சில அதிகாரங்கள் வழங்கப்படலாமெனவும், அவர் குறிப்பிட்டார். இவை தொடர்பான மேலதிக விடயங்கள் பரஸ்பர பேச்சுவார்த்தைகளுக்கூடாக தீர்வு காணப்படலாமெனவும் ஜே.ஆர். ஜெயவர்த்தனா குறிப்பிட்டார். இதே வேளை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது சக்திக்கு உட்பட்ட சகலதையும் செய்யத் தயாராக இருந்த போதும், புலிகளின் வேகத்திற்கு ஏற்ப செயற்பட்டால் தென்னிலங்கையில் கிளம்பும் எதிர்ப்பு காரணமாக ஒப்பந்தம் சீர்கெட்டுவிடும் என்ற நியாயமான அச்சத்தையும் கொண்டிருந்தார்.

புலிகள் ஐந்து அம்சக் கோரிக்கையொன்றை எனக்கு அனுப்பி வைத்திருந்ததையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இந்தக் கோரிக்கை மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த விடயங்கள் வருமாறு :-

1) புலிகளுக்கு தெளிவான பெரும்பான்மை இருக்கக்கூடியதாக இடைக்கால நிர்வாகம் விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும்.
2) இடைக்கால நிர்வாக சபையில் இடம்பெறும் ஏனைய பிரதிநிதிகள் தொடர்பாக புலிகளின் ஆலோசனை பெறப்பட வேண்டும்.
3) வடக்கு கிழக்கின் பொலீஸ் படை புலிகளால் அமைக்கப்பட வேண்டும்.
4) வெளிவிவகாரம், பாதுகாப்பு, குடிவரவு, சுங்கம் போன்றவை தவிர்ந்த ஏனைய அனைத்து அதிகாரங்களும் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு உட்பட இடைக்கால நிர்வாக சபைக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும்.
5) அரசியல் மன்னிப்பு வழங்கப்பட்டு அனைத்துக் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

பிரபாகரனுடனான எனது சந்திப்பில் அவர் இவற்றை நினைவுபடுத்தினார். இவை தொடர்பாக ராஜீவ்காந்தி வாக்குறுதி வழங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார். வடக்கு கிழக்கு மாகாணத்தில் இலங்கைப் படையினர் முகாம்களுக்குள் முடக்கப்படவில்லை என்றார். பாடசாலைகள் கல்லூரிகளிலிருந்து படையினர் விலக்கிக் கொள்ளப்படவில்லை என்றார். அகதிகள் சொந்த இடங்களுக்கு திரும்ப வழி வகுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டார். அண்மைக் காலத்தில் நிகழ்ந்த சிங்களக் குடியேற்றங்கள் கைவிடப்படும் அறிகுறியை அரசாங்கம் காட்டவில்லை. புனர்வாழ்வு நடவடிக்கைகளில் அரசாங்கம் நேரடியாக ஈடுபடக்கூடாது எனவும், இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட முன் பொலீஸ் நிலையங்கள் மீளத் திறக்கப்படக்கூடாது எனவும் பிரபாகரன் விரும்பினார். புலிகள் தவிர்ந்த மாற்று அமைப்புகள் யாழ்ப்பாணதிற்கோ, கிழக்கு மாகாணத்திற்கோ திரும்ப அனுமதிக்கப்படுவதை அவர் ஆட்சேபித்தார். விசேடமாக ஈபிஆர்எல்எப் மற்றும் ரெலோ அமைப்பைச் சேர்ந்தவர்கள் புலிகளுக்கு எதிரான தாக்குதல் திட்டங்களுடன் இந்திய உளவுப் பிரிவுகளால் ஆயுதபாணிகளாக்கப்பட்டு அனுப்பபட்டுள்ளதாக குற்றம் சுமத்தினார். புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று புதுடில்லி ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார். இந்தியா இத்தகையதொரு நிலையை புலிகளுக்கு வழங்கத்

தயாராக இல்லை என்று அவர் உணர்ந்து இருந்தார். இந்தக் காரணங்களாலேயே பிரபாகரன் சாத்விக எதிர்ப்பு இயக்கங்களைத் தூண்டிவிட்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அமுலாக்கத்திற்கு தடைக்கல் போட்டார். லலித் அத்துலத்முதலியின் தூண்டுதலின் பேரில் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையின் போது சென்னைக்கும், புதுடில்லிக்கும் இராணுவ உதவி தேவையெனக் கோரி மீண்டும் மீண்டும் தாம் விடுத்த செய்தி உரிய முறையில் செவிமடுக்கப்படவில்லையெனப் பிரபாகரன் ஆதங்கம் கொண்டவராகக் காணப்பட்டார்.

இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படாமைக்கு பிரதான காரணம் புலிகள் தமது தரப்பு பிரதிநிதிகள் யார் என்பதைதக் கடந்த ஆறு வார காலமாக அறிவிக்காமல் இருப்பதே என்பதை பிரபாகரனுக்கு நான் சுட்டிக் காட்டினேன். போதுமான காலத்திற்கு முன்பாக இது தொடர்பாக புலிகளுக்கு அனுப்பபட்டிருந்த தகவலை அவர்கள் உதாசீனம் செய்திருந்தனர். தமது பிரதிநிதிகளை நியமிப்பது தாமதமாகும் போது முழு நடைமுறைகளும் தாமதிப்பதை தவிர்க்க முடியாது என்பதைத் தெளிவுபடுத்தினேன். அவரது கோரிக்கைகள் புதுடில்லியின் பூரண ஆதரவுடன் நிறைவேற்றப்படும் என்பதை உறுதிப்படுத்தியதோடு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு பங்குதாரரான இலங்கை அரசுக்கு இருக்கும் தயக்கங்கள் குறித்தும் எடுத்து உரைத்தேன். இந்தியாவும், புலிகளும் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை பூரணமாக நிறைவேற்றவில்லையென கருதப்படும் எந்தவொரு சிறு வாய்ப்பும் இலங்கை அரசு தனது கடமைப்பொறுப்பிலிருந்து விலகும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் எனவும் எச்சரித்தேன். யதார்த்த நிலையை உணர்ந்து கொள்ளும்படி பிரபாகரனை கேட்டுக்கொண்டேன். உதாரணமாக 40 – 50களில் குடியேறிய சிங்கள மக்களை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றுவது எந்தச் சிறிலங்கா அரசுக்கும் இயலாத ஒன்று என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றேன். எப்படியாயாயினும் எண்பதுகளுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சிங்கள குடியேற்றங்களை மீளப் பெற வைக்க முயற்சிகள் எடுக்கப்படுமென்றேன். வடக்கு கிழக்கின் இடைக்கால நிர்வாக சபை ஆற்றலுடன் செயற்படும் போது இவற்றை நடைமுறைச் சாத்தியமாக்கலாம் என்றேன்.

அவர் குறிப்பிட்ட மற்ற விடயங்கள் பற்றிப் பேசுகையில், புலிகளுக்குள்ள முக்கிய பங்கை இந்தியா ஏற்றுக் கொள்கிறது. எனவே இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்

பூரண அமுலாக்கத்திற்கு உதவும் வகையில் ஏனைய அமைப்புகளின் ஒத்துழைப்பை பெறுவதற்கான கூட்டணியை அமைக்க முயற்சிக்கும்படி வேண்டினேன்.

இதற்குப் பதிலளிக்கையில் ஈரோஸ் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவற்றுடன் செயற்படுவது பற்றி சிந்திக்கலாம். ஆனால் புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எப் என்பவற்றுடன் இணக்கம் காண்பது கடினம் எனப் பிரபாகரன் தெரிவித்தார். ஈபிஆர்எல்எப் அமைப்பிற்கு குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு சில இடங்களில் குறிப்பாக கிழக்கில் இருப்பதைச் சுட்டிக்காட்டி அவர்களையும் அரவணைத்துச் செல்வது பயனுடையதாக இருக்கும் என்றேன். பிரபாகரனின் பதிலில் மிரட்சி தெரிந்தது.
செப்ரெம்பர் 23ம் திகதிய பேச்சுவாாத்தைகள் முடிவு எதனையும் காணாமல் முற்றுப் பெற்றது. இடைக்கால ஆளும் சபையை உருவாக்க ஜே.ஆர். ஜெயவர்த்தனா இணங்குகிறார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பது பிரபாகரனின் முதல் விருப்பமாக இருந்தது. பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகசபையில் புலிகளுக்கு ஏழு உறுப்பினர்கள் இருக்க வேண்டுமெனவும், வடக்கு கிழக்கு மாகாணத்தின் பொலீஸ் படையின் பெரும்பகுதி புலிகளின் போராளிகளால் நிரப்பப்பட வேண்டுமெனவும் வற்புறுத்தினார்.
இந்தக் கோரிக்கைகளை ஜெயவர்த்தனாவின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, பொலிஸ்படை நியமனம் போன்ற நிறைவேற்று அதிகாரங்களை இடைக்கால ஆளும் சபைக்கு பொறுப்பளிக்க தயக்கத்துடன் அவர் இணங்கினார். ஆனால் புலிகள் விரும்பிய அளவுக்கு வரி அறவீடுகளை அனுமதிக்க அவர் தயாராக இருக்கவில்லை. புலிகள் வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால ஆளும் சபைக்கு நியமிக்க விரும்பும் இரண்டு அல்லது மூன்று நபர்களின் பெயர்களைத் தந்தால் அவற்றிலிருந்து ஒருவரை அல்லது ஒரு குழுவை பிரதம நிர்வாகப் பொறுப்புக்கு நியமித்து அதனைச் செயற்படுத்த முடியுமெனின் தேர்தல்கள் நடத்தப்படும் வரை இச் சபை ஆட்சி நடத்த முடியுமெனவும் ஜே.ஆர். தெரிவித்தார். புலிகளுக்கு இச் சபையில் அறுதிப் பெரும்பான்மை இருப்பதை அவர் ஏற்றுக் கொண்டார். இந்தப் பேச்சுவார்த்தையின் போது காலம் கடத்தும் வகையிலேயே பிரபாகரன் காணப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த திலீபனை நல்லூரில் சென்று சந்திக்கும் படி பிரபாகரன் என்னைக் கேட்டுக் கொண்டார். சனத்திரளுக்கு மத்தியில் போய்

உண்ணாவிரதத்தை கைவிடும்படி நான் கோர வேண்டுமென பிரபாகரன் விரும்பினார்.

எனது வேண்டுகோளை ஏற்று திலீபன் உண்ணாவிரதத்தை கைவிடுவார் என்பது உறுதிப்படுத்தப்படுமானால் அவ்வாறு செய்யலாம் என்பதே என் நிலைப்பாடாக இருந்தது. பிரபாகரன் இத்தகைய உறுதிப்பாட்டை வழங்கத் தயாராக இருக்கவில்லை. இப்பேச்சுவார்த்தைகளின் இடையே திலீபனின் உயிர் செப்ரெம்பர் உ௬ல் பிரிந்தது. இது தேவையற்ற தவிர்த்து இருக்கக்கூடிய ஒரு உயிரிழப்பு ஆகும். திலீபனின் உயிரிழப்பு காரணமாக ஒப்பந்தத்தை ஆதரிப்பது மற்றும் அமுல்படுத்தவதற்குள்ள புலிகளின் ஆளுமை வெகுவாகப் பாதிக்கப்பட்டு விட்டதாக பிரபாகரன் தெரிவித்தார். இது தொடர்பான முழுப்பொறுப்பும் பிரபாகரனிடமே இருக்கிறது எனத் தெரிவித்ததுடன் ஒப்பந்தத்தின் அமுலாக்கத்திற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படாமல் முட்டுக்கட்டை போடப்படுமானால் எதிர்காலத்தில் தமது அரசியல் இலக்குகளை எட்டுவதற்கு இந்தியாவின் உதவியைப்பிரபாகரன் பெற இயலாது என்பதையும் தெளிவாக்கினேன்.

செப்ரெம்பர் உ௬ம் உ௮ம் திகதிகளில் நடந்த பேச்சுக்களின் போது இலங்கை அரசாங்கம் தமது கோரிக்கைகளை நிறைவேற்ற தயாராக இருப்பதாக தெரியவில்லை என பிரபாகரன் குறைப்பட்டார். இந்திய அரசாங்கமும் சில விடயங்களைச் செய்ய வேண்டும் என்றார். அதாவது இந்திய ஊடகங்களில் புலிகள் தொடர்பான விமர்சனங்கள் நிறுத்தப்பட வேண்டும். இந்திய அமைதிப்படையினர் யாழ்ப்பாணத்தில் சட்டம்,ஒழுங்கு பேணும் நடவடிக்கைகளை புலிகளிடம் விட வேண்டும், மக்கள் நடத்தும் கண்டனப்பேரணிகள் மற்றும் மக்களுக்கான நிவாரணம் வழங்கல் போன்ற வற்றில் இந்தியப் படையினர் தலையீடு தவிர்க்கப்பட வேண்டும். என்பன போன்றவற்றை அவர் வெளிப்படுத்தினார். இடைக்கால ஆளும் சபை ஏற்படுத்தப்பட்டு அது முழு அளவில் செயற்படும்வரை அமைதியை நிலைநாட்டுவதற்கான பணியில் இந்தியப் படையினரின் தவிர்க்க முடியாத பங்களிப்புகள் தொடரும் என்பதை பிரபாகரனுக்கு நான் எடுத்து உரைத்தேன். பொது மக்கள் மத்தியில் எதிர்ப்பு உணர்வை வளர்த்தல் மற்றும் எதிர்நடவடிக்கைகள் எடுக்கத்தூண்டுதல் என்பன மூலமாக குழப்ப நிலை தோன்றுமேயானால் விடயங்கள் சீராக நிகழ்ந்தேறாமைக்கான பொறுப்பை பிரபாகரனே ஏற்க வேண்டிவரும் எனவும் தெரிவித்தேன்.

புலிகளின் போராளிகளைப் பேணுவதற்காக நிதியுதவி தேவையென புதுடில்லியிடம் பிரபாகரன் வேண்டுகோள் விடுத்திருந்தார். இது விடயத்தில் நான் தலையிட வேண்டுமெனப் பிரபாகரன் கேட்டார். இந்திய அமைதிப் படையினருக்கும், உள்ளூர் நிர்வாகத்திற்கும் எதிராக பொது மக்களைத் தூண்டி விடுவதை நிறுத்துவதாக அவர் வாக்குறுதி அளித்தார். செப்ரெம்பர் ௨௬ம் ௨௮ம் திகதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஒரு இணக்க அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு பிரபாகரன் தயக்கத்துடன் ஒப்புக் கொண்டார். எனினும் தான் அதில் கையொப்பமிட முடியாது என்றார். ஏனெனில், இது அரசியல் சம்பந்தப்பட்டது. தான் அடிப்படையில் ஒரு இராணுவத் தலைவர் என்றார். எனினும், இந்த ஆவணத்தில் கையொப்பமிட மாத்தயாவை அவர் அனுமதித்தார். எனவே நானும் எனது செயலாளரை

இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் பிரபாகரன் கையெழுத்திடுவதற்கு ஒப்புதல் அளித்த ஒரேயொரு ஆவணம் இதுவாகும். இந்த ஆவணத்தின் விபரம் வருமாறு :-

வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஒரு இடைக்கால ஆளும் சபையை நிறுவ ஜனாதிபதி ஜெயவர்த்தனா இணங்கியுள்ளார் என்பதை இந்தியத் தூதுவர் தீக்சித், புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எடுத்துரைத்தார். இடைக்கால ஆளும் சபையின் அமைப்பு வருமாறு :-

அ) பிரதமநிர்வாகி:. சபையின் நிர்வாகி

புலிகளால் சமர்ப்பிக்கப்படும் மூவரது பெயர்களிலிருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இச்சபையின் அங்கத்தவர்களாக பன்னிரண்டு பேர் நியமனம் பெறுவர் புலிகள் சார்பாக ஐவரும், கூட்டணி சார்பாக இருவரும், புலிகளால் நியமனம் பெறும் முஸ்லிம் ஒருவர் உட்பட முஸ்லிம்கள் சார்பாக இருவரும், சிங்களவர்கள் சார்பாக இருவரும் அங்கத்தவர்களாக நியமிக்கப்படுவர். இந்த அமைப்பு முறைக்கு பிரபாகரன் இணக்கம் தெரிவித்தார்.

தேர்தல்கள் நடத்தப்படும் வரையிலான இடைக்காலத்திற்கு பெங்களூர் பேச்சுவார்த்தைகளில் குறிப்பிட்ட 10.1 மற்றும் 10.௨ பிரிவுகளுக்கு அமைவாக நிறைவேற்று அதிகாரங்களை பகிர்ந்தளிக்க ஜனாதிபதி தயாராக இருப்பதை இந்தியத் தூதுவர் டிக்சிட் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எடுத்துரைத்தார்.

பொருத்தமான பந்திகளில் வரையறை செய்யப்படுகின்றமைக்கு இணங்க பிரதம நிர்வாகி சட்டம் ஒழுங்கு பேணுவது உட்பட அனைத்துக்

கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியவராவார்.

ஜூலை 1987ல் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பூரணமான அமுலாக்கத்திற்கு ஒத்துழைப்பை வழங்குவதாக பிரபாகரன் உறுதிமொழி வழங்கியுள்ளார். தளபதிகளின் மெய்ப்பாதுகாப்புக்கான ஆயுதங்கள் தவிர்ந்த ஏனையவற்றை ஒப்படைக்க புலிகள் தயாராக இருப்பதாகவும், பாதுகாப்பான சூழல் உருவானதும் மிகுதி ஆயுதங்களும் ஒப்படைக்கப்படுமென பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

பொலீஸ் நிர்வாகம் உட்பட அனைத்து சிவில் நிர்வாக அமைப்புகளும் எதுவித தடங்கல்களும் இல்லாமல் செயற்படுவதற்கு புலிகள் பூரணமான ஒத்துழைப்பை நல்குவதற்கு பிரபாகரன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு நீதியான – நேர்மையான தேர்தல் நடத்தப்படுவதற்கு சகல ஒத்துழைப்புகளையும் வழங்க பிரபாகரன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகங்களும், புலிகளும் பரஸ்பரம் விமர்சிக்கும் போக்கை நிறுத்திக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக புலிகளின் தலைவர் பிரபாகரனும், இந்தியத் தூதுவர் டிக்சிட்டும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் பந்திகள் உ – 11 வரை குறிக்கப்பட்ட விடயங்கள் நடைபெறும். 48 மணி நேரத்தினுள் இடைக்கால ஆளும் சபை குறித்து ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியிடப்படும்.

இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் சொல்லப்பட்ட விடயங்கள் பற்றி இந்திய இலங்கை அரசாங்கங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இவற்றிற்கு அப்பால் புலிகள் " சாகும்வரை உண்ணாவிரதம் " என்பன உட்பட அனைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மீளப்பெறுவதாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

இந்த இடத்தில் இன்னுமொரு முக்கிய விடயம் குறிக்கப்படல் வேண்டும். பன்னிரண்டு பேரைக் கொண்ட இடைக்கால ஆளும் சபையில் பிரதம நிர்வாகி உட்பட அறுவர், மற்றும் முஸ்லிம் பிரதிநிதி, தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளில் ஒருவர் என எண்மர் புலிகளின் சார்பாகவே இருந்திருப்பர். சரியாகக் கையாளப்படின் புலிகளின் சார்பாக ஒன்பது பேராகவும் இருக்கலாம். இதனால் அதிகாரப் பகிர்வுக்கான நியாயமான கோரிக்கைகளை பூரணப்படுத்தியிருக்கலாம். ஜெயவர்த்தனா மீண்டும் பிரதம நிர்வாகியாக பிரபாகரனை நியமிக்க வேண்டுமென்பதில் அக்கறையாக இருந்தார். அத்துடன் பிரபாகரன் முன்வருவதாக இருந்தால் பெயர்ப்பட்டியல்

பரிசீலனைக்குத் தேவை இருக்காது எனவும் தெரிவித்தார். பிரபாகரனின் மறுப்பை நான் ஜெயவர்த்தனாவுக்கு தெரிவித்தேன்.

இணக்கப்பாட்டு அறிக்கையின்படி பிரதமநிர்வாகி பதவிக்காக புலிகள் மூவரது பெயர்களை முன் மொழிந்தனர். மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த என். பத்மநாதன், யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோரின் பெயர்கள் அதில் இருந்தன. இந்தப் பெயர்களோடும், இணக்கப்பாடு அறிக்கையோடும் நான் கொழும்பு திரும்பினேன். நான் கொழும்பு திரும்பிய 48 மணி நேரத்தினுள் இந்த இணக்கப்பாடு செயல்வடிவம் பெறத்தொடங்குவதைக் காண விரும்புவதாக பிரபாகரன் என்னிடம் தெரிவித்திருந்தார்.

செப்ரெம்பர் 28ல் கொழும்பு திரும்பிய ஒரு மணி நேரத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்தேன். அவர் சி.வி.கே. சிவஞானத்தை பிரதமநிர்வாகியாக தெரிவு செய்தார். இடைக்கால ஆளும் சபைக்கான ஏனைய அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியலை விரைவில் பெற்றுத் தரும்படியும், அது கிடைத்ததும் உத்தியோகபூர்வமாக இடைக்கால ஆளும் சபையை அமைப்பதற்கான பணிப்புரைகளைத் தான் விடுக்க முடியும் என ஜெயவர்த்தனா தெரிவித்தார். நான் வீடு திரும்பியதும் யாழ்ப்பாணத்திலிருந்த ஜெனரல் ஹர்கிரத் சிங்குடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். ஜெயவர்த்தனாவின் முடிவுகளைத் தெரியப்படுத்தினேன். புலிகளுடன் தொடர்பு கொண்டு இடைக்கால ஆளும் சபையின் ஏனைய அங்கத்தவர்களது பெயர்ப்பட்டியலை தரும்படி கோரினேன்.

செப்ரெம்பர் 29 அன்று நள்ளிரவு வேளையில் பாலசிங்கம் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். சி.வி.கே. சிவஞானத்தை பிரதம நிர்வாகியாக தெரிவு செய்த ஜெயவர்த்தனாவின் முடிவை பிரபாகரன் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவித்தார். பத்மநாதன் தான் பிரபாகரனின் ஒரே தெரிவு என்று அவர் குறிப்பிட்டார். பிரபாகரன் சமர்ப்பித்த பெயர்ப்பட்டியலில் இருந்து தான் சி.வி.கே. சிவஞானம் தெரிவு செய்யப்பட்டார் என்பதையும், ஜெயவர்த்தனாவுடன் இந்த அடிப்படையிலேயே இணக்கம் கண்டிருந்ததையும் சுட்டிக் காட்டினேன். மூன்று பெயர்களைக் கொண்ட பட்டியல் தரப்பட்டிருந்தாலும் பெயர்கள் முன்னுரிமை அடிப்படையிலேயே வரிசைப்படுத்தப்பட்டிருந்தன எனத் தெரிவித்த பாலசிங்கம், பத்மநாதனது பெயர் முதலிடத்தில் இருப்பதால் அவரையே ஜெயவர்த்தனா நியமித்து இருக்க வேண்டும் என்றார். இந்த மாதிரியான முரண்டு பிடித்தல்களை ஜெயவர்த்தனா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லையென பாலசிங்கத்திற்கு நான் தெரிவித்தேன். எப்படியிருந்தாலும் பத்மநாதனை பிரதமநிர்வாகியாக நியமனம்

செய்யும் வகையில் ஜெயவர்த்தனாவை இணங்கச் செய்ய முயல்கிறேன் நிர்வாகியாக நியமிக்க முடியாது என ஜனாதிபதி தெரிவித்தார். ஏனெனில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த போது தடுப்புக்காவல் கைதிகள் பலர் தப்பி ஓடுவதற்கு இவர் துணை செய்துள்ளார். அரசாங்கத்துக்கு விசுவாசமான சத்தியப்பிரமாணத்தை மீறித் துரோகம் இழைத்த அதிகாரி ஒருவரை பிரதம நிர்வாகியாக நியமிக்க முடியாது என்பதை தெளிவுபடுத்தினார். அத்துடன் செப்ரெம்பர் 23 – 28 திகதிகளுக்கு இடையில் பிரபாகரன் உட்பட அனைத்து போராளிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதை சுட்டிக்காட்டினார். மேலும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அமுலாக்கத்திற்கு ஏதுவாக தான் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் எடுத்துரைத்தார். எனினும் புலிகளின் சிந்தனைப் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை எதிர்ப்பதாகக் குறிப்பிட்டார். அத்துடன் "நாட்டின் எதிர்கால நலன்கருதி மிகப்பெரும் விட்டுக் கொடுப்புகளை நான் செய்துள்ளேன். ஆனால் இப்போதும் நானே ஜனாதிபதி. எனவே நாட்டின் ஒரு பகுதி எப்படி ஆளப்பட வேண்டும் என்று ஒரு பிரிவினைவாதத் தலைவர் எனக்கு ஆணையிடுவதைச் சகித்துக்கொள்ள முடியாது." எனவும் தெரிவித்தார். கடுமையைத் தணிக்குமாறு நான் அவரைக் கேட்டுக் கொண்டேன். அது பயனளிக்கவில்லை.

நான் அங்கிருந்து வெளியேறியதும் யாழ்ப்பாணத்திலிருந்த இந்திய அமைதிப் படையினருடன் தொடர்பு கொண்டு சி.வி.கே. சிவஞானம் இடைக்கால ஆளும் சபையின் பிரதம நிர்வாகியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதியின் தீர்மானத்தை விரைவாக அவருக்கு அறிவிக்கும்படி கேட்டேன். செப்ரெம்பர் 30ம் திகதி காலையில் எனக்கு கிடைத்த செய்தி பத்மநாதன் பிரதம நிர்வாகியாக நியமிக்கப்படும் வரை இடைக்கால ஆளும் சபைக்கான புலிகளின் ஏனைய பிரதிநிதிகளது பெயர் விபரம் தரப்படமாட்டாது என்பதேயாகும். இதனால் இடைக்கால ஆளும் சபை அமைக்கும் அனைத்து முயற்சிகளும் முளையிலேயே கருகிப்போனது.

பிற்குறிப்பு

இதற்குப் பின்னர் தான் அக்டோபர் 3ம் திகதி வல்வைக் கடலில் குமரப்பா புலேந்திரன் பயணம் செய்த கடற்புறா படகு கைப்பற்றப்பட்டது என்பதும், 5ம் திகதி பலாலி படைத் தளத்தில் நஞ்சருந்தி உயிரிழந்தனர் என்பதும், அக்டோபர் 10 திகதியளவில் இந்தியப் படையினருடனான மோதல் முழு அளவில் ஆரம்பமானது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பகுதி 2

# தேன்நிலவின் போது.......

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இந்திய அரசின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டிருந்த மாகாணசபை நிர்வாகத்தை சீர்குலைக்க வேண்டும். இதுவே 1989 – 90 காலப்பகுதியில் பிரேமதாசா அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது புலிகளின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. திரு. அண்ணாமலை வரதராஜப்பெருமாள் தலைமையில் ஏற்படுத்தப்பட்டிருந்த மாகாண சபையைக் கலைத்து ஒரு புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும். அத் தேர்தலில் பங்கு பற்றி மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகாரம் பெறப்பட்ட பின்னரேயே அடிப்படைப் பிரச்சனைகளுக்கான தீர்வு பற்றிப் பேச முடியும். இதுவே அமைதிப் படையின் வெளியேற்றம் , வடக்கு கிழக்கு மாகாணசபை கலைப்பு , என்பவற்றின் பின்னரேயே வடக்கு கிழக்கு மாகாணத்தில் இயல்பு நிலைமை திரும்பும் எனப் புலிகள் கூறிக் கொண்டிருந்தனர்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களை ஒருமைப்பாட்டிற்கு விசுவாசமாக சத்தியப் பிரமாணம் செய்ய நிர்ப்பந்திக்கும் அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தம் மீளப்பெறப்பட வேண்டும். என்ற இக்கோரிக்கையை முன் வைத்து ஈரோஸ் அப்போது பாராளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிப்பு செய்து கொண்டிருந்தது. இத் திருத்தம் மீளப்பெறுவது தேவையானது எனப் புலிகள் கூறிக் கொண்ட போதும், அதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாணசபை நிறுவப்பட்டபோதே முதலமைச்சரின் சிபாரிசு இல்லாமல் அல்லது அதனது பதவிக்காலத்தை பூர்த்தி செய்யாமல் அவற்றை மத்திய அரசாங்கமோ, ஜனாதிபதியோ கலைக்க முடியாது என்பது வரையறுக்கப்பட்டிருந்தது. இது மாகாண சபைகளுக்கு வழங்கப்படடிருந்த ஒரு சட்ட ரீதியான பாதுகாப்பு ஆகும்.

ஆனால் வடக்கு கிழக்கு மாகாண சபையினால் அதிகாரப் பகிர்வு தொடர்பாக முன் வைக்கப்பட்ட பத்தொன்பதாவது அம்சக் கோரிக்கையை ஒரு தலைப் பட்சமான ஈழப்பிரகடனம் என்று வர்ணிப்பதில் புலிகளும், அவர்களது

ஆதரவாளர்களும், முனைப்புக் காட்டினர். இந்தப் பிரகடனத்தைச் சுட்டிக்காட்டி வடக்கு கிழக்கு மாகாணசபையை சட்டபூர்வமாக கலைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.
1989 நவம்பர் மாதம் முதல் புலிகள் இக்கோரிக்கையை விடுத்த போதும் வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்படவில்லை. 1990 மார்ச்சில் இந்திய அமைதிப் படையினர் முற்றாக வெளியேறிச் சென்ற பின்னரும் கூட வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்படவில்லை. ஆனால் 1990 ஜூன் மாதத்தில் அதாவது தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மேலாக இச் சபை செயற்படாது இருந்த நிலையிலேயே இது செயற்படாதிருப்பதாக அரசாங்கம் பிரகடனம் செய்தது.

1990 மார்ச் 24ல் இந்திய அமைதிப்படையினர் முற்றாக வெளியேறுவதற்கு முன்பாகவே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் நாட்டிலிருந்து வெளியேறி இருந்தனர். 1990 ஜூன் மாதத்தில் மீண்டும் இலங்கை அரசுடன் முழு அளவிலான போரைப் புலிகள் ஆரம்பித்தனர். இந்த இடைக்காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் நிர்வாகப் பொறுப்பை சட்டபூர்வமான தேர்தல் ஒன்றுக்கு ஊடாகவே பெற விரும்புவதாகப் புலிகள் காட்டிக் கொண்டனர். பின் கதவுக்கூடாக வந்து அதிகாரத்தைக் கைப்பற்றவிரும்பவில்லையென புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அப்போது தொடர்ச்சியாக அறிவித்து வந்தார்.

ஆனால் தேர்தல்கள் நடத்துவதற்கான உகந்த சூழல் உருவாக்கப்பட முன்பாகவே மீண்டும் மோதல்களை ஆரம்பித்தனர். இது ஒரு புறம் இருக்க மறுபுறத்தில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தையும் அதன் கீழான மாகாணசபையையும் தாம் ஏற்கவில்லையெனவும் தெரிவித்து வந்தனர். இதற்கு புலிகளின் உத்தியோகபூர்வ இதழான விடுதலைப்புலிகள் இதழில் " உடைந்து போன ஒப்பந்தமும், உறுதி தளராத புலிகளும் " என்னும் தலைப்பில் அன்ரன் பாலசிங்கம் எழுதிய கட்டுரை ஒரு தகுந்த சான்றாகும். இக்கட்டுரையானது கே.என். திக்சித் எழுதி வெளியிட்ட கொழும்புப்பணி என்னும் நூல் தொடர்பான விமர்சனமாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அக் கட்டுரையில் " உருப்படியான அரசியல் அதிகாரம் எதுவும் அற்றது மாகாணசபைத் திட்டம் " என்று திரு. பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார் "தமிழரின் தன்னாட்சி உரிமையை இந்த ஒப்பந்தம் சமாதி கட்ட முனைந்தது. "என்று வர்ணித்துள்ளார். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்

குறைபாடுகளே அதன் தோல்விக்கு காரணம் என்று வாதாடியுள்ளார். " தமிழ் சிங்கள தேசிய இனங்களின் நீண்ட கால சிக்கலை தீர்மானிக்க முயன்ற இந்த முக்கிய ஒப்பந்தம் வெகுசனக் கருத்தாடலுக்கு விடப்படாது திரை மறைவில் அவசரமாக இரகசியமாக செய்யப்பட்டது." எனக் குற்றம் கூறுகிறார். எந்தக் காலத்திலும், எந்தக் கட்டத்திலும் பிரபாகரன் இந்திய இலங்கை ஒப்பந்த்ததை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆரமபம் முதல் அதனை எதிர்த்து நின்றார் என்று இடித்துக் காட்டுகின்றார்.

இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் புலிகள் தமது எண்ணப்போக்கை எப்போது மாற்றிக் கொண்டனர் என்பது மிகப் பெரும் கேள்வியாக எழுகிறது. ஏனெனில் சட்டபூர்வமாக வடக்கு கிழக்கு இணைப்பை சாத்தியமாக்கியது இந்திய இலங்கை ஒப்பந்தம். இந்த ஒப்பந்த்தின் கீழேயே வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட நாடு முழுமைக்கும் மாகாண சபை முறையை அறிமுகப்படுத்திய அரசியல் அமைப்புக்கான 13வது திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனவே வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகப் பொறுப்பைக் கையேற்பதற்கு முன்பாக புலிகள் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய பல விடயங்கள் இருப்பதாகவே தோன்றுகிறது.

# பலமு; கரமு;

ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற வகையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இனப்பிரச்சனை தொடர்பாக மேற்கொள்ளும் அணுகு முறை தமிழ் பேசும் ஏனைய கட்சிகளின் அணுகுமுறையைவிட வித்தியாசமானது. வேறுபட்டது. தமிழ் பேசும் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இறுதித் தீர்வுக்கான முயற்சிகளைப் பின் தள்ளுவதும், இறுதித் தீர்வுகளுக்கான முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அன்றாடப் பிரச்சனைகளைப் பின் தள்ளுவதும் பொறுப்பற்ற செயல் என்றே கட்சி கருதி வருகிறது.

இவ்வகையில் 1990ல் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டு மீண்டும் போர்முனைக்கு திரும்பியதைத் தொடர்ந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அப்போது ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசா அவர்களிடம் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு ஒரு அரசியல் தலைமைத்துவம் ஏற்படுத்தப்பட வேணடும் என்று வேண்டியது. பாராளுமன்ற ஆசனங்கள் எதனையும் பெற்றிருக்காத அக்கால கட்டத்தில் எமது வேண்டுகோளைப் பரிசீலனை செய்யலாம் என்ற தொனியில் " பலமு " என்று சொல்லிக் கொண்டிருந்தாரே யல்லாமல் செயற்படுத்தும் முயற்சிகளில் பிரேமதாசா ஈடுபடவில்லை. 1993ல் பிரேமதாசாவும் கொல்லப்பட்டு விட்டார். அதன் பின்னர் 1994ல் பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவியான திருமதி சந்திரிகா பதவிப் பொறுப்பை ஏற்ற போது எமக்கு பாராளுமன்றத்தில் ஒன்பது ஆசனங்கள் இருந்தன. ஆனால் மக்களின் கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் சூழல் இருக்கவில்லை. எனினும் இத் தருணத்தில் எமது கட்சி வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு அரசியல் தலைமைத்துவம் ஏற்படுத்தப்பட வேண்டுமென விரும்பியது. இதனைச் செய்ய முடியும் என்ற அர்த்தத்தில் திருமதி சந்திரிகா " கரமு " என்றார். ஆனால் செய்யவில்லை.

" தமிழீழத் தனியரசு " என்னும் கோரிக்கையைக் காட்டியபடி போரை முன்னெடுத்து வந்த நிலையில், தமிழ் பேசும் மக்கள் இலங்கை அரசின் மீது முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்த முடியாது. இந்த காலப்பகுதியில்

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு ஏற்படுத்தப்படும் ஒரு அரசியல் தலைமைத்துவம் – இடைக்கால நிர்வாகமாக இருக்க முடியும் என்பது எமது நம்பிக்கை.

தமிழ் பேசும் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளின் தீர்வுக்கான அரசியல் நடைமுறைகளை மேற்கொள்வது இறுதித் தீர்வை நோக்கிய அர்த்த பூர்வமான அடியெடுப்பாக அமையும் என்பதோடு இறுதித் தீர்வையிட்டு மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கவும் உதவும். விரைவில் தீர்வு காணக்கூடிய அம்சங்களை விரைவுபடுத்தவும், உடன் பாட்டிற்குரிய அம்சங்களை அழுத்தங்கள் மூலம் ஏற்க வைத்தலும் அவசியம்.

இவ்வகையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட 13ம் 16ம் அரசியல் யாப்பு திருத்தங்கள் அவசியமான சட்டவாக்கங்களுடன் இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்துவது முதலாவது கட்டமாக இருக்கலாம்.

பொதுசன ஐக்கிய முன்னணியினால் முன் வைக்கப்பட்டிருந்த தீர்வுப் பொதியில் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதென இனங்காணப்பட்டதும், ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான அம்சங்களை அரசியல் யாப்பில் சேர்த்துக் கொள்ள வைத்தல் இரண்டாவது கட்டமாக மேற்கொள்ளப்படலாம். பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மை பலத்துடன் இவற்றைச் சாதிக்க முடியுமாயின் இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சியில் தேசிய கட்சித் தலைமைகளின் போக்கு குறித்து தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நம்பிக்கை முளைவிடலாம்.
இந்த இரு கட்டங்களும் வெற்றிகரமாக நிறைவேறும் போது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தீவிரவாதப் போக்கு தளர்வடையும் என்று எதிர்பார்க்கலாம். இவ்வாறான கருதுகோளுடன் 1994முதல் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செயற்பட்டு வருகின்றது. பல்வேறு காரணங்களால் இனப்பிரச்சனையின் தீர்வு முயற்சியில் தோன்றியிருக்கும் தேக்க நிலைமைக்கு மத்தியில் ஈபிடிபியின் நிலைப்பாடு முன்னெடுக்கப்பட்டது.

எனினும் ஈபிடிபியின் இந்த நிலைப்பாட்டை புலிகளும், அவர்களது முகவர்களும் நிர்த்தாட்சண்யமாக எதிர்த்தனர். இந்த எதிர்ப்புக்கான காரணங்களையிட்டு அவர்கள் பொது மக்களுக்கு எந்தவித விளக்கங்களையும் முன் வைத்தது

இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அரசியலமைப்பு முழுமையாக மாற்றப்பட வேண்டுமே தவிர ஒரு சில திருத்தங்களுடன் திருப்தி காண முடியாது என்றனர். ஒரு சமயத்தில் இனப்பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வு காணும் முயற்சியை திசை திருப்பும் கைங்கரியமாகிவிடும் எனக் கூறினர். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் புலிகளின் அரசியல் முதன்மைக்கு குந்தகம் ஏற்பட்டுவிடும் என்று அச்சம் தெரிவித்தனர். இன்னுமொரு தருணத்தில் சுருங்கக் கூறின் தமிழ் பேசும் மக்களின் தன்னாட்சி உரிமை என்பது புலிகள் நிர்ணயிப்பதை ஏற்றுக் கொள்வது என்பதையே இவர்கள் வெளிப்படுத்தினர்.

கபடத்தனமான உள்நோக்கங்களுடன் கூடிய இத்தகையவர்களின் செயற்பாடுகளே வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகம் அரசியல் தலைமைத்துவம் இல்லாமல் இதுவரை செயற்படக் காரணமாகும். இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதைவிடவும், அன்றாடப் பிரச்சனைகளால் அலைக்கழிக்கப்படும் மக்கள் மத்தியில் வெற்று ஆரவாரமாக பேசுவதிலேயே இவர்கள் அக்கறை காட்டினார். மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் தொடர்பாக பேசுவதை அரைகுறை சலுகைகளுக்காக விலைபோவது என்று குற்றம் சுமத்தினார். எனினும் தமக்கு பதவிகள் தேவை என்றபோது மட்டும் எல்லாவிதமான சமரசங்களையும் செய்து கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

# இடைக்கால நிர்வாகம் இப்போது தேவையற்றிருப்பது ஏன்?

கடந்த பொதுத் தேர்தலுக்கு பின்னர் பதவிப் பொறுப்பேற்றுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் புலிகளுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்த்ததைச் செய்து கொண்டுள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அங்கமாக வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக இப்போது பரவலாகப் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இந்த நிலையில் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு ஒரு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்துவதன் சாதக பாதக அம்சங்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்வது மிகப் பொருத்தமானதே.

முதலாவதாக புலிகளுக்கு அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாமல் போர்ச்சூழல் பேணப்பட்டுக் கொண்டிருந்த காலம் இப்போது இல்லை. புலிகள் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் மீது நம்பிக்கை கொண்டு, யுத்தத்தை நிறுத்தி புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கண்டு அதனைக் அமுல்படுத்தியும் வருகின்றனர். போர்ச்சூழல் இல்லாத காரணத்தால் பெருமளவிலான அன்றாடப்பிரச்சனைகளுக்கு மக்கள் தாமாகவே தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக யாழ்ப்பாணம் போக்குவரத்திற்கான பாதுகாப்பு அனுமதி பெறுவது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகுவது, போன்ற பிரச்சனைகள் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டவையாகி உள்ளன. மாகாண நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில் நீண்டகால கண்ணோட்டத்துடனான அபிவிருத்திச் செயற்திட்டங்களே முன்னுரிமை பெற வேண்டியதாக உள்ளது. மாகாண நிர்வாகத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ள கல்வி, சமூகசேவைகள், விளையாட்டு, நீர்ப்பாசனம், பொதுநிர்வாகம், உள்ளூராட்சி என்பன போன்ற விடயங்களில் சமூக முன்னேற்றத்தையும், எதிர்கால நலன்களையும் இலக்காகக் கொண்ட திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். இதற்கு இடைக்கால ஏற்பாடு என்பது பயன்பொருத்தமானதாக இருக்காது.

மேலும் இங்கு இடைக்காலம் என்று கருதப்படுவது எது? என்ற கேள்வியும் எழுகிறது. ஏனெனில் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான நிர்வாகப் பொறுப்பைக் கோரும் புலிகள் அதனையொரு இடைக்கால ஏற்பாடாகவே கருதி கருத்து தெரிவிக்கின்றனர். அவ்வாறாயின் மீண்டும் ஒரு யுத்தம் தொடங்கப்படுவதற்கு முன்னுள்ள காலமாக இந்த இடைக்காலம் கருதப்படுகிறதா? அல்லது தீர்வை நோக்கிய திசையில் பயணிப்பதற்கான மாறும் கால கட்டமாக இடைக்காலம் கருதப்படுகிறதா? இந்தக் கேள்வி மிக முக்கியமானதாகும். ஏனெனில் புலிகள் தனித் தமிழீழக் கோரிக்கையை முன் வைத்து அதற்காக ஆயுதங்கள் ஏந்திய போராட்டப்பாதையில் ஈடுபட்டிருப்பதாக கூறி வருபவர்கள். அதிலிருந்து முழுமையாக விடுபடத் தயாராக இருப்பதாகக் காட்டிக்கொள்ளவில்லை. உண்மையில் தீர்வை நோக்கிய திசையில் பயணிப்பதற்கு இடையிலான மாறும் காலமாக இடைக்கால ஏற்பாடு கருதப்படுமாயின் "தமிழீழக்கோரிக்கை" "ஆயுதப்போர்" போன்ற விடயங்களில் ஒளிவு மறைவற்ற வெளிப்படைத் தன்மை காண்பிக்கப்படலாம். அவ்வாறான வெளிப்படையான அறிவிப்புகள இல்லாதிருப்பதுசந்தேகங்கள் தோன்றவே வழி வகுக்கின்றது. ஆதலினாலேயே போர்ச்சூழல் இல்லாத இன்றைய தருணத்தில் "இடைக்கால ஏற்பாடு" என்னும் தங்குமடத்தைத் தேடித் தரித்து நிற்பதை விடவும் முழுமையான தீர்வை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகளே முக்கியமானதாகிறது.

இரண்டாவதாக, புலிகள் தமது நம்பகத் தன்மையை இன்னமும் நிருபிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. புலிகளின் கடந்த காலச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் எழுப்பியிருக்கும் கேள்விகளுக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க பதில்களை புலிகள் இன்னமும் முன் வைக்கவில்லை. உதாரணமாக சக அமைப்புகள் மீது தடை விதித்தமை முதல், முஸ்லிம் மக்களின் வெளியேற்றம், வலிகாமம் இடம்பெயர்வு, கடந்த கால பேச்சுக்களின் தோல்விகள் என்ற பல்வேறு விடயங்களில் இழைத்த அரசியல் தவறுகளைக் கண்டு கொள்ளவோ, அவற்றைத் தக்கவாறு தீர்த்துக்கொள்ளவோ புலிகள் இன்னமும் தயாராக இல்லை. மாறாக தமிழத் தேசியக் கூட்டமைப்பை அழைத்துப் பேசியும், முஸ்லிம் காங்கிரஸைக் திருப்திப்படுத்தியும், ராஜீவ் காந்தி கொலையை தற்செயல் துன்பியல் சம்பவம் என்று வர்ணித்தும், சமாளிக்க முனையும் நடவடிக்கைகளையே காணக்கூடியதாக உள்ளது. புலிகளின் போக்கில் அடிப்படை மாற்றம் ஏற்படாத நிலையில் வடக்கு கிழக்கு

மாகாண நிர்வாகத்தை ஒப்படைப்பது என்பது ஐக்கிய இலங்கைக்குள் துரோகமாகவே இருக்கும். ஏனெனில் இத்தகைய சக்திகளின் பௌதீக இருப்புக்கு கூட புலிகள் அனுமதி தர மாட்டார்கள் என்பது வெளிப்படையான உண்மை. எனவே புலிகள் தமது நம்பகத் தன்மையை ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நிரூபிக்கும் வரை வடக்கு கிழக்கு நிர்வாகம் அவர்களுக்கு ஒப்படைக்கப்படுவது நியாயமானதாக இருக்க முடியாது.

மூன்றாவதாக புலிகள் அமைப்பின் செயற்பாட்டில் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதில்லை என்பது பகிரங்கமான ரகசியம். போர்ச்சூழலால் துன்பப்பட்டு துவண்டு போயிருக்கும் மக்களிடமே வரி அறவிடுதல், கப்பம், நன்கொடை வசூலிப்பு எனப்பல வழிகளில் நிதி வசூலிப்புகளில் புலிகள் ஈடுபட்டிருப்பது மறைவான விடயம் அல்ல. படையணிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வது முதல், போரில் கட்டாயமாக ஈடுபடுத்தப்படும் சிறுவர்கள் வரை பல முறைப்பாடுகள் ஆங்காங்கே பதியப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், வவுனியா, தரைவழிப்பாதையை மக்கள் போக்குவரத்திற்கு அனுமதிக்க கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக மறுத்து வந்த புலிகள் அதனால் தமிழ் பொது மக்களுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்கள், உயிர்இழப்புகள் குறித்துக் கண்டு கொள்ளவில்லை. இவ்வாறாக எத்தனையோ உதாரணங்களை எடுத்துக்காட்ட முடியும். சுருக்கமாகச் சொன்னால் புலிகள் மக்களின் நலன்களுக்கு உகந்தது எது என்பதைக் கண்டறிந்து அவற்றுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு மாறாக தமது இராணுவ நலன்களைப் பேணுவதிலேயே எப்போதும் அக்கறை கொண்டுள்ளனர்.

மேலும் இலங்கை அரசுடன் பகைமை தவிர்ப்பையும், போர்நிறுத்தத்தையும் கடைப்பிடிக்கும் புலிகள் மறுபுறத்தில் ஆயுதபாணிகளாகவே உள்ளனர். எனவே இந்த ஆயுதங்கள் சிறீலங்காப் படையினரிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது என்பதற்குப் பதிலாக மக்களை அச்சுறுத்தவே பயன்படும் என்பது வெளிப்படை. ஆதலால் வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகம் புலிகளின் பொறுப்பில் விடப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நன்மைகள் மக்களைச் சென்றடையப் போவதில்லை என அஞ்சுவது நியாயமானது.

நான்காவதாக வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகம் தன்னிச்சையாக புலிகளிடம் கையளிக்கப்படுமாயின் அது ஜனநாயக விரோதமானதாகவே இருக்கும். ஏனெனில் வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட நாடு எங்கும்

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றப் பொதுத் தேர்தல், உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் எனப் பல தேர்தல்கள் நடத்தப்பட்டு உள்ளன. போர்ச்சூழலுக்கு மத்தியில் நடத்தப்பட்ட இத் தேர்தல்களில் மக்கள் வாக்களிப்பில் ஈடுபட்டு பிரதிநிதிகளையும் தெரிவு செய்துள்ளனர். இன்றைய சூழலில் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு ஒரு தேர்தல் நடத்தப்படுவதற்கு என்ன தடை இருக்கிறது என்பது மக்களுக்கு புரியாத ஒரு புதிர் ஆகும்.

மேலும் 1990ல் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கென ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பை தோற்றுவிக்க அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா மேற்கொண்ட முயற்சிகளை புலிகள் நிராகரித்தமை இங்கு சுட்டிக்காட்டத் தக்கதாகும். அதிகாரத்தைக் கைப்பற்றப் பின் கதவுகளால் வரும் குறுக்கு வழிகளை நாட வேண்டிய தேவை புலிகளுக்கு இல்லை என்று புலிகளின் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் அப்போது கூறி இருந்தார் என்பது நினைவு கூர வேண்டியதாகும். அத்துடன் சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழுக்கள் நாடெங்கும் நீதியான நியாயமான தேர்தல்கள் மூலம் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி வலியுறுத்தி வருகிறது. அவ்வாறாயின் அதிலிருந்து வடக்கு கிழக்கு மாகாணம் மட்டும் எவ்வாறு விதிவிலக்குப் பெறமுடியும்? வடக்கு கிழக்கு மாகாணத்தை மட்டும் பாசிசப் போக்குமிக்க ஒரு சர்வாதிகாரக் குழுவிடம் ஒப்படைப்பது எத்தகைய ஜனநாயகத்தில் சேர்க்கப்படக் கூடியதாகும்?

ஐந்தாவதாக கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக ஏற்பாடென்பது இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் அரசியலமைப்பு மாற்றங்களைச் செய்யும் பாதையைத் திசை திருப்பும் கைங்கரியமாகவே கருதப்பட்டது. அரைகுறைத் தீர்வு என்றும், அற்ப சொற்ப சலுகைகள் என்றும் வசைமாரி பொழியப்பட்டது. இவற்றில் ஓரளவுக்கு நியாயம் இருந்தது என்று கருதுபவர்களைக் கூட ஏமாற்றத்திற்கு உள்ளாக்குவதாகவே இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை காணப்படுகிறது. உண்மையில் இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளைத் தள்ளிப் போடவும், இயலுமான காலம் வரை இழுத்தடிக்கவும், அடிப்படைப் பிரச்சனைகள் பற்றி பேசுவதை தவிர்க்கவும் மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியே இடைக்கால நிர்வாகப் பொறுப்பை கையளிக்க வேண்டும் என்னும் கோரிக்கையாகும்.

இதே வேளை இனப்பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வு காணும் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிப்பதற்கு இரு தடைகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கவுக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை பலம் இல்லை என்பதை ஒரு தடையாகவும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதை இரண்டாவது தடையாகவும், சொல்லப்படுகிறது. ஆனால் சுதந்திர இலங்கையில் இரு தடவைகளில் மட்டுமே மூன்றிலிரு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி நடத்தப்பட்டு உள்ளது. 1970ல் பதவிக்கு வந்த திருமதி சிறிமாவோ தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், 1977ல் பதவிக்கு வந்த ஜே.ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் மூன்றிலிரு பெரும்பான்மையைக் கொண்டிருந்தன. இந்த இரு சந்தர்ப்பங்களிலும் அரசியலமைப்புகள் மாற்றத்திற்கு உள்ளாகியது. இனப்பிரச்சனை மென்மேலும் சிக்கலுக்கு இலக்காகியது. இது வரலாறு. எனவே ஆட்சி அதிகாரத்தில் இரு பிரதான கட்சிகளும் பங்கு வகிக்கும் இன்றைய சந்தர்ப்பமே இனப்பிரச்சனை தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தி முடிவு காண்பதற்கு பொருத்தமானதாகும். அத்துடன் சர்வதேச ரீதியான அழுத்தமும், முன்னர் எப்போதும் இல்லாதவாறு இப்போது பலமாகக் காணப்படுகிறது. எனவே இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் தருணம் முன்னர் எப்போதும் இல்லாதவாறு இப்போது கனிந்து உள்ளது.

இறுதியாகக் கூறுவதாயின் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு நிரந்தரமாக தீர்வு காணும் நோக்கில் அடிப்படை வடயங்கள் தொடர்பிலான பரஸ்பர விட்டுக் கொடுப்புடன் கூடிய பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிப்பதே இப்போது தேவையானதாகும். இதற்கு மாறாக தடையை நீக்குதல், இடைக்கால நிர்வாக ஒழுங்கை கையளித்தல் என்பன தொடர்பில் முன்னெடுக்கப்படும் பேச்சுக்கள் இலங்கையின் இப்போதைய அமைதியை நீர்க்குமிழி போலாக்கிவிடும்.